மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
துரித கற்றல் கையேடு தரம் :- 04
தமிழ்

## சிறுவர் பாடல்

### துணை

உடலுக்குத் துணை உயிராகும்.
உழவுக்குத் துணை உழைப்பாகும்.
பாட்டுக்குத் துணை பண்ணாகும்.
பண்புக்குத் துணை படிப்பாகும்.
அரசுக்குத் துணை அமைச்சாகும்.
அருளுக்குத் துணைஅன்பாகும்.
பொருளுக்குத் துணை அறமாகும்.
பொறுமைக்குத் துணை அறிவாகும்.

வே.நல்லதம்பி
நன்றி-கண்ணே பாப்பா

1. உடலுக்குத் துணை எது? :- …………………………….
2. உழவுக்குத் துணை எது? :- …………………………….
3. பாட்டுக்குத் துணை எது? :- …………………………….
4. பண்புக்குத் துணை எது? :- …………………………….
5. அரசுக்குத் துணை எது? :- …………………………….
6. அருளுக்குத் துணை எது? :- …………………………….
7. பொருளுக்குத் துணை எது? :- …………………………….
8. பொறுமைக்குத் துணை எது? :- …………………………….
9. இப்பாடலைப் எழுதியவர் யார்? :- ……………………………

---

## நுங்கு வண்டி

சின்னச் சின்ன நுங்கு
செங்க ரும்பு நுங்கு
தின்னத் தின்ன இனிக்கும்
திகட்டி டாத நுங்கு

தாகம் தீர்க்கும் நுங்கு
தண்ணீர் போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கண்டேன்!

செல்ல கணபதி
நன்றி பிறந்தநாள

1. இப்பாடல் எதப்பற்றிக் கூறுகின்றது? …………………………….
2. நுங்கு எந்த மரத்தில் இருந்து பெறப்படும்? …………………….

❖ பாடலில் உள்ள இடை வெளியை நிரப்புவோம்

உடலுக்குத் துணை ..............
.............. துணை உழைப்பாகும்.
பாட்டுக்குத் ...................
.....................துணை படிப்பாகும்.

அரசுக்குத் துணை ....................
..................... துணைஅன்பாகும்.
பொருளுக்குத் துணை ..............
......................... துணைஅறிவாகும்

❖ பொருத்தமான சொற்களை வைத்துப் பாடலைப் பூர்த்தி செய்க

தின்னத் தின்ன , செங்க ரும்பு

சின்னச் சின்ன நுங்கு
........................ நுங்கு
...................இனிக்கும்
திகட்டி டாத நுங்கு

தண்ணீர் , செய்யும்

தாகம் தீர்க்கும் நுங்கு
................ போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
............. சின்ன நுங்கு!

நுட்பம் , நுங்கு வண்டி

நுங்கை வெட்டித் தின்றேன்
.................. செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
......... ஒன்றைக் கண்டேன்!

❖ பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கண்டேன்!

செல்ல கணபதி
நன்றி பிறந்தநாள்

1. இப்பாடலை எழுதியவர் யார்?
   .........................................
2. இப்பாடலில் உள்ள மடக்கேறு உள்ள சொல் ஒன்று எழுதுக?
   .........................................
3. இரட்டைக் கொம்புள்ள சொல் ஒன்று எழுதுக?
   .........................................

விகடத் துணுக்கு

மகள் :- "அப்பா நான் அண்ணனை விட , கணிதத்தில் இரண்டு புள்ளிதான் குறைவு"
அப்பா :- "அப்படியா. மிகவும் நன்று. அண்ணன் எத்தனை புள்ளி வாங்கினான்.
மகள் :- "இரண்டு புள்ளிகள்"